**தேதி :** 30.06.2026 **CC.No.:** 183/2017 **PW :1** **கணேசன்**

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

பஸ்சை யார் ஓட்டி வந்தார்கள் என்றால் எதிரி தான் ஓட்டி வந்தார். எனக்கு முன்னால் சென்ற பைக்கில் யார், யார் சென்றார்கள் என்றால் சித்திக், தாமஸ் ஆகியோர்கள் சென்றார்கள். சித்திக், தாமஸ் ஆகியோர்கள் சென்ற பைக் என் மீது மோதியதா? என்றால் எதிரி ஓட்டி வந்த பஸ் தட்டி அவர்கள் என்னுடைய வாகனத்தில் வந்து மோதினார்கள். என்னுடைய வாகனத்திற்கும், சித்திக், தாமஸ் ஆகியோர்கள் சென்ற வாகனத்திற்கும் எவ்வளவு தூரம் இடைவெளி இருக்கும் என்றால் 20 அடி இருக்கும். எனக்கு முன்னால் சென்ற இருசக்கரவாகனமும், எதிரியின் பேருந்தும் நேருக்கு நேர் மோதியதா? என்றால் இருசக்கரவாகனமும், பேருந்தின் டிரைவர் சீட் பக்கமும் மோதியது.

பேருந்தின் முன்பக்கம் சேதமடைந்ததா? என்றால் என் மீது இருசக்கரவாகனம் மோதி நானும், என் மனைவியும் கீழே விழுந்ததினால் சேதத்தை பார்க்கவில்லை. சித்திக், தாமஸ் இருசக்கரவாகனத்தின் முன்புறம் சேதமடைந்ததா? என்றால் சேதமடைந்தது. இறந்து போன நபரின் தலையில் வண்டி ஏறி, இறங்கியதா? என்றால் இல்லை. கெல்மேட் உடைந்ததா? என்றால்

தலையில் ஹெல்மெட் இருந்தது. சித்திக், தாமஸ் சென்ற பைக்கின் கண்ணாடி உடைந்து கீழே கிடந்ததா? என்றால் என்னால் அதெல்லாம் பார்க்க முடியவில்லை.

விபத்திற்கு பிறகு அவர்களின் பைக் அங்கு தான் கிடந்தது என்றால் சரிதான். என்னுடைய பைக்கும் அங்கு தான் கிடந்தது. என்னுடைய பைக் முழுவதுமாக சேதமடைந்தது. பஸ் எங்கு நின்றது என்றால் பஸ் நிற்காமல் சென்று விட்டது. சம்பவம் நடந்த இடத்தில் இரத்தக்கறைகள் இருந்தது. சம்பவயிடத்தில் சுமார் 60 நபர்கள் கூடினார்கள். சம்பவம் நடந்தவுடன் ஒரு நொடியில் கூடினார்கள். போலீசார் அங்கு வந்தார்களா? என்றால் வந்தார்கள்.

எதிரியின் பெயர் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் என்னிடம் எதிரியின் அடையாளம் கேட்கவில்லை என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் எனக்கு முன்னால் பைக்கில் சென்ற நபரின் மீது பஸ் ஏறி தலை நசுங்கி விட்டது என்று சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய வண்டியின் முன்பக்கம் சேதாரம் இருந்தது என்றால் வண்டி முழுவதும் சேதாரம் இருந்தது. எனக்கு முன்னால் போன இருசக்கரவாகனத்தின் பின்புறம் சேதாரம் இருந்தது என்றால் நான் அதனை பார்க்கவில்லை.

மருத்துவர் என்னை விசாரித்தபோது, பைக் மோதியதினால் காயம் ஏற்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய மனைவி மருத்துவரிடம் எதாவது சொன்னார்களா? என்றால் எனக்கு தெரியாது. எனக்கு முன்னால் சென்ற பைக் மீது பஸ் மோதி, அந்த பைக் என் வண்டியின் மீது மோதியதாகத் தான்

நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மருத்துவமனைக்கு என்னை அக்கம் பக்கத்தினர் அனுப்பி வைத்தார்கள். நான் மருத்துவமனை செல்லும்போது போலீசார் சம்பவயிடத்திற்கு வரவில்லை. போலீசாருக்கு நான் தகவல் சொல்லவில்லை.

நான் தான் அஜாக்கிரதையாக வண்டியை வேகமாக ஓட்டி, முன்னால் சென்ற இருசக்கரவாகனத்தின் பின்பக்கம் மோதி இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. அதில் தான் எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி, சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் இந்த விபத்து நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் நஷ்டஈடு வாங்கவில்லை. வழக்கு நிலுவையில் உள்ளது. நான் நஷ்டஈடு வாங்குவதற்காக வேண்டி, நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.07.02 11:05:31 +0530